# மதுபானம் / புகையிலை / போதைப் பொருட்கள்

போதைப் பொருட்கள் வைத்திருப்பது, பாவிப்பது அன்றி விற்பனை செய்வது தண்டணைக்குரியது. மதுபானம் புகையிலை வாங்குவதற்கும்; வயதெல்லை உண்டு.

## போதைப் பொருட்கள்

சட்டவிரோத போதைப்பொருட்கள் வைத்திருத்தல், விற்றல் அல்லது பாவித்தல் தண்டணைக்குரிய குற்றம். இது சிறிய அளவிற்கும் பொருந்தும். இதில் எவை சட்டவிரோதமாவை என்பது மருந்துப்பாவனைச்சட்டத்தில் (Betäubungsmittelgesetz) வரையறுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருட்களின் வணிக அடிப்படையான விற்பனையானது அதிகூடிய தண்டணைக்குட்படலாம்.

## மதுபானமும் புகையிலையும்

மதுபானமும் புகையிலையும் வாங்குவதற்கும் வயதெல்லை உண்டு. Basel-Landschaft மாநிலத்தில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கு மதுபானவகைகள் சிகரெட் வகைகள் விற்பனை செய்யக்கூடாது. சில மதுபானவகைகளை உம்: Spirituosen 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் விற்பனை செய்யலாம்.

## புகைத்தலுக்குத் தடை

சுவிஸில் புகைத்தலுக்குத் தடை செய்யப்பட்ட விதம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வித்தியாசப்படுகிறது. புகைத்தலால் சுற்றியுள்ளவர்களைப் பாதுகாக்கும் மத்திய அரசுச் சட்டம் மற்றும் மாநில விருந்தோம்பல் சட்டத்தை (Gastgewerbegesetz) Basel-Landschaft மாநிலமும் ஆதரிக்கிறது. புகைத்தல் தடை செய்யப்பட்ட இடங்களாவன:

- மூடப்பட்ட பகிரங்க நுழைவாயில் கொண்ட இடங்கள் (வைத்தியசாலை, நிர்வாகக் கட்டிடங்கள், பாடசாலை, தொல்பொருட்காட்சியகம், சினிமா கொட்டகை, புகையிரதம், பஸ், கடைகள், கடைத்தொகுதிகள் )
- பலபேர் சேர்ந்து வேலை செய்யுமிடங்களில் புகைக்கக்கூடாது.

உணவகங்களின் அளவைப் பொறுத்து புகைத்தலுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான உணவகங்களில் புகைக்கும் அறைகள் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/good-to-know/alcohol--tobacco--drugs